1970 மார்ச் 5]

Electric lights for Vattavilai village

* 227 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) Whether electric street lights were instaled in Vattavilai village in Udangudi Panchayat Union Council area in Tirunelveli District; and

(*b*) if not, when tehey will be installed?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன்: (அ) திருநெல்வேலி மாவட்டம் உடன்குடி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த வட்டவிளை கிராமத்தில் எட்டு மின்சார விளக்குகள் நிறுவப்பட்டு 31—7—1968 தேதியிலிருந்து மின்இணைப்புக் கொடுக்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: இன்னும் அந்தப் பகுதியில் பல கிராமங்களில் தெரு விளக்குகள் போடப்படாத நிலையுள்ளது. கான்பரன்ஸ் நடந்த நேரத்தில் திருநெல்வேலியில் அதைப் பற்றி அமைச்சர் அவர்களிடம் சுட்டிக்காட்டியும் இன்னும் அவை போடப்படாத நிலை இருக்கிறது. ஆகவே அதைக் கவனத்தில் கொண்டு இந்தக் கிராமங்களுக்கு மின்சார விளக்குகள் போடுவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : அப்படி தமிழ்நாட்டில் 30,000 சிற்றூர்களும் கிராமங்களும் இருக்கின்றன. எல்லா ஊர்களுக்கும் அப்படி விளக்குகள் போடும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

Coimbatore District Motor and Automobile Labour Union

* 228 Q.—THIRU G. GOMTHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government are aware that under the auspices of Coimbatore District Motor and Automobile Labour Union, a number of persons went on hunger strike about the 2nd July 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (அ) & (இ). ஆம். தாராபுரத்திலுள்ள அர்த்தநாரி பாலாம்பாள் மோட்டார் சர்விஸ் என்ற பேருந்து நிறுவனத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சி. வேலுசாமி, ஆர். சீதாபதி ஆகியோர் பணியிலிருந்து நீக்கப்பட்டதற்காக 1—7—1969 அன்று உண்ணாவிரதம் இருந்தனர். தாராபுரம் அர்த்தநாரி பாலாம்பாள் மோட்டார் சர்விஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தினர், மேற்சொன்ன இரண்டு பணியாளர்களையும் பயணச்சீட்டுகளை வழங்காமலிருந்த முறைகேடான செயலுக்காகப் பணியிலிருந்து நீக்கிவிட்டனர். தாராபுரத்திலுள்ள கோவை மாவட்ட மோட்டார் தொழிலாளர் சங்கம், மேற்குறிப்பிட்ட இரண்டு தொழிலாளர்களின் வேலை நீக்கம் குறித்து 28—4—1969 அன்றும் 9—6—1969 அன்றும்

ஒரு தகராறை எழுப்பியது. இணக்க ஏற்பாடு நடைபெற்று வருகையில் மேற்குறிப்பிட்ட இரு தொழிலாளர்களும் 1—7—1969 அன்று உண்ணாவிரதம் மேற்கொண்டனர். தொழிலாளர் நல அதிகாரியின் நன்முயற்சியின் மூலம் 3—7—1969 அன்று உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. பின்னர் இந்த இரு தொழிலாளர்களும் நிர்வாகத்தினருடன் தங்கள் கணக்குகளைத் தீர்த்துக் கொண்டனர்.

Meeting of Chief Secretary with Burma Repatriates

* 214 Q.—THIRU N. S. V. CHITHAN, THIRU V. K. KOTHANDARAMAN, DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Chief Secretary to Gvernment has met the repatriates from Burma about the 27th November 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:

(அ) ஆம்.

(இ) பர்மா அகதிகள் தலைமைச் செயலருக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தனர். அதில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக சில்லறை விடுப்பு ரூ. 30 வழங்கியதில் சீர்கேடுகள் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் செய்த நேர்முக விசாரணையில் இக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனத் தெரிய வந்தது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக ஒரு வங்கி ஆரம்பிக்கப்படவிருக்கிறதே, அது எப்போதிருந்து செயல்படத் தொடங்கும்? அதில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: இவர்கள் மேலும் சில கோரிக்கைகளை வைத்து அன்றைய தினம் பேசியிருக்கிறார்கள். அதில் பிரதானமான ஒன்று, அவர்கள் பர்மாவிலிருந்து வந்து இங்கு மிகவும் கஷ்டப்படுகிற காரணத்தால் சிறிது காலத்திற்கு அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதும் ஒன்று. அது விஷயமாக என்ன முடிவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது விஷயமாக அம்மாதிரி விதிவிலக்கு அளிப்பதற்கில்லை. ஆனால், அதைக்காட்டிலும் நல்ல பல நன்மைகள் செய்து அவர்களுடைய நலன்களில் இந்த அரசு நல்ல அக்கறை கொண்டிருக்கிறது. இந்த அரசு கொண்டிருக்கிற நல்லெண்ணத்தோடு மத்திய அரசில் உள்ள அந்தத் துறையும் நல்ல ஆதரவு கொடுத்து வருகிறது.